FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8318766

1. District : Tirupathur PS: Vigilance and Anti-Corruption Year: 2026 FIR No: 3/2026 Date: 19/06/2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended by Act 16 of 2018. Sections பிரிவுகள்: 7(a) and 12 r/w 7(a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : - Date to : -
குற்ற நிகழ்வு நாள் 18/06/2026 நாள் முதல் நாள் வரை
Time Period : Before 12.00 Hrs Time from : - Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை -
(b) Information Received at PS. Date : 19/06/2026 Time : 16.00 Hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Volume-I 19/06/2026 Time : 17.30 Hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Written
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: Office of the Regional Transport officer, Tirupathur. 13 Km South West
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. D. Venugopal (b) Father's/ Husband's Name : Dhakshanamoorthy
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 1977 (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Zonal Deputy Tahsildar (g) Address : Tirupathur Taluk office, Tirupathur District
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
(1) Tr. K. Pannerselvam (55/2026) s/o Kaliyappan, Regional Transport officer, Tirupathur. (2) Tr. C. Murali (52/2026) s/o Chinnapaiyan, Motor Vehicle Inspector (Gr.I), Tirupathur. (3) Tr. Y. Ananth (37) s/o Yuvaraj, Driving license Photographer (Temporary), Tirupathur, RTO office.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— No delay —

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet Enclosed

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

19/6/26

19/06/2026

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும். நேரமும்
19/06/2026 @ 19.00 Hrs

Name: பெயர் Inspector of Police,
Rank: நிலை V & AC, Thirupathur எண்

பணிந்து அனுப்பப்படுகிறது :-

இன்று 19.06.2026-ஆம் தேதி மாலை 16.00 மணியளவில் நான் நிலைய ஆஜரில் இருந்தபோது, திரு.D.வேணுகோபால், த/பெ தட்சணாமூர்த்தி, மண்டல துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், திருப்பத்தூர் என்பவர் நேரில் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று பார்க்க, அதன் விவரம் பின்வருமாறு: 19.06.2026 அனுப்புநர் திரு.D.வேணுகோபால், த/பெ தட்சணாமூர்த்தி, மண்டல துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், திருப்பத்தூர். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பத்தூர். ஐயா, நான் தற்போது திருப்பத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் மண்டல துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். 18.06.2026 அன்று நான் திருப்பத்தூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகத்தில் பணிநியமனத்தின் (Deputation) அடிப்படையில் பணியிலிருந்த போது, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அவர்கள் அன்று காலை என்னைத் தொடர்புகொண்டு, உடனடியாக திருப்பத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலகத்தில் அறிக்கை செய்யுமாறு கூறியதன் பேரில், நான் காலை சுமார் 10.30 மணிக்கு திருப்பத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் காவல் ஆய்வாளர் திருமதி.B.கௌரி அவர்களிடம் அறிக்கை செய்து கொண்டேன். அப்போது காவல் ஆய்வாளர் என்னிடம் திருப்பத்தூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்திலும் அதனை ஒட்டியுள்ள டிரைவிங் ஸ்கூல் சம்மந்தமான அலுவலகங்களிலும் வாகன ஓட்டுனர் உரிமம் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல், வாகனங்களின் பதிவு சான்றிதழ் வழங்குவதற்கு இடைத்தரகர்கள் (புரோக்கர்கள்) மூலமும் மேலும் அருகிலுள்ள ஓட்டுநர் பயிற்சி பள்ளி மூலமும் பொது மக்களிடம் லஞ்சம் பெறுவதாக நம்பகமான தகவல் வந்துள்ளதாக என்னிடம் கூறியதன் பேரில் 18.06.2026 தேதி காலை சுமார் 11.30 மணியளவில் நானும், காவல் ஆய்வாளர் திருமதி.B.கௌரி மற்றும் குழுவினருடன் புறப்பட்டு காலை சுமார் 11.55 மணிக்கு எலவம்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள திருப்பத்தூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்திடம் சென்று சிறிது நேரம் அந்த அலுவலகத்தை கண்காணித்து நண்பகல் சுமார் 12.00 மணியளவில் திருப்பத்தூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இருதுறை திடீர்

சோதனை மேற்க்கொள்ளப்பட்டது. அப்போது அலுவலகத்தின் நுழைவு வாயிலில் நின்றிருந்த திருப்பத்தூர் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.கா.பன்னீர்செல்வம் அவரிடம் நாங்கள் வந்த நோக்கத்தை விளக்கி சோதனை மேற்கொள்ளப்பட்டது. அலுவலக கட்டிடத்தில் சோதனையில் எந்தவித பணமோ பொருளே காணப்படவில்லை. பின்னர் வட்டாரப் போக்குவரத்து அலுவலக ஊழியர்களை தனித்தனியே விசாரணை செய்து, அவர்களிடமிருந்த ரொக்கப் பணத்தை எண்ணிச் சரிபார்த்து, அவர்கள் பராமரித்து வந்த தனிநபர் கையிருப்பு பதிவேட்டில் (**Personal Cash Register**) பதிவு செய்யப்பட்டிருந்த இருப்புத் தொகையுடன் ஒப்பிட்டுப் பார்த்த விவரம் பின்வருமாறு:-(1)திரு. கா. பன்னீர்செல்வம், வயது 55, த/பெ. காளியப்பன், வட்டாரப் போக்குவரத்து அலுவலர் என்பவரை விசாரித்ததில், தாம் 27.01.2025 முதல் இவ்வலுவலகத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலராக பணியாற்றி வருவதாக தெரிவித்தார். அவரிடமிருந்த ரொக்கப் பணத்தை எண்ணிச் சரிபார்த்ததில் ரூ.810/- இருந்தது. அது சம்மந்தமாக அவர் தனிநபர் பண கையிருப்பு குறிப்பிடவில்லை. (2)திரு. சி. முரளி, மோட்டார் வாகன ஆய்வாளர் (நிலை-I) என்பவரை விசாரித்ததில், அவரிடமிருந்த ரொக்கப் பணம் ரூ.450/- இருந்தது. (3) திருமதி ர. சாவித்திரி, உதவியாளர் என்பவரிடம் ரூ.140/- ரொக்கம் இருந்தது. அவருடைய தனிநபர் கையிருப்பு பதிவேட்டில் ரூ.360/- இருப்பதாக பதிவு செய்யப்பட்டிருந்தது. (4)இளநிலை உதவியாளர் திருமதி.மு.அன்பரசி என்பவரிடம் ரூ.270/- இருந்தது. தனிநபர் கையிருப்பு பதிவேட்டில் ரூ.400/- என பதிவு செய்யப்பட்டிருந்தது. (5) உதவியாளர் செல்வி.செ. சங்கீதா என்பவரிடம் ரூ.280/- இருந்தது. அவருடைய தனிநபர் கையிருப்பு பதிவேட்டிலும் ரூ.280/- என சரியாக பதிவு செய்யப்பட்டிருந்ததால், எந்தவித முரண்பாடும் இல்லை. (6)உதவியாளர் திரு. ம.லட்சுமணன் என்பவரிடம் ரூ.420/- இருந்தது. பதிவேட்டில் ரூ.460/- என பதிவு செய்யப்பட்டிருந்தது. (7)தட்டச்சர் திரு. ரா. தர்மேஷ் என்பவரிடம் ரூ.790/- இருந்தது. பதிவேட்டில் ரூ.1,030/- என பதிவு செய்யப்பட்டிருந்தது. (8) கண்காணிப்பாளர் திரு. மு. வெங்கடேசன் என்பவரிடம் ரூ.320/- இருந்தது. பதிவேட்டில் ரூ.600/- என பதிவு செய்யப்பட்டிருந்தது. (9)

இளநிலை உதவியாளர் திரு.வி. பிரவீன் குமார் என்பவரிடம் ரூ.210/- இருந்தது. பதிவேட்டில் ரூ.550/- என பதிவு செய்யப்பட்டிருந்தது. (10) கணக்காளர் திரு. மா. பாலகிருஷ்ணன் என்பவரிடம் ரூ.2,000/- இருந்தது. தனிநபர் கையிருப்பு பதிவேட்டில் ரூ.2,500/- என பதிவு செய்யப்பட்டிருந்தது. (11)இளநிலை உதவியாளர் திரு. கோ. மருதாச்சலம் என்பவரிடம் ரொக்கப் பணம் எதுவும் இல்லை. ஆனால், அவருடைய தனிநபர் கையிருப்பு பதிவேட்டில் ரூ.150/- இருப்பதாக பதிவு செய்யப்பட்டிருந்தது. (12)கண்காணிப்பாளர் திரு. பா. கதிர்வேல் என்பவரிடம் ரூ.450/- இருந்தது. பதிவேட்டில் ரூ.480/- என பதிவு செய்யப்பட்டிருந்தது. (13)நேர்முக உதவியாளர் திருமதி.ர.விஜயராணி என்பவரிடம் ரூ.4,020/- இருந்தது. அவருடைய தனிநபர் கையிருப்பு பதிவேட்டில் ரூ.4020/- என இருந்தது. (14) திரு. மாயகிருஷ்ணன் என்பவரை விசாரித்தபோது, தாம் அலுவலகத்திற்கு அச்சிடும் பணிக்காக வந்திருந்ததாகவும், தன்னிடம் ரொக்கப் பணம் எதுவும் இல்லை என்றும் தெரிவித்தார். மேற்படி அலுவலர்கள் மற்றும் பணியாளர்களிடமிருந்து சரிபார்க்கப்பட்ட ரொக்கப் பணத்தொகையையும், அவர்களது தனிநபர் கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்த தொகையும் முரண்பாடாக உள்ளது பற்றி விளக்கம் கேட்க, பதிவேடு பதிவு செய்யப்பட்ட பின்னர் தனிப்பட்ட செலவுகளுக்காக ஒரு பகுதி பணத்தை செலவு செய்ததாக தெரிவித்தனர். காணப்பட்ட வித்தியாசங்கள் பெரிய அளவில் இல்லாததால் அவரவர்களிடமே அவர்களது பணம் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அலுவலக வளாகத்தில் இருந்த பிற தனிநபர்களை ஒவ்வொருவராக விசாரணை செய்யப்பட்ட விவரம் பின்வருமாறு:- (1) திரு.சபரி, வயது-29, த/பெ. வெள்ளியங்கிரி என்பவரை விசாரித்தபோது, தாம் ஓட்டுநர் உரிமத்தை (Driving Licence) புதுப்பித்துக் கொள்வதற்காக (Renewal) அலுவலகத்திற்கு வந்திருப்பதாக தெரிவித்தார். அவரிடமிருந்த ரொக்கப் பணத்தை எண்ணிச் சரிபார்த்ததில் ரூ.50/- இருந்தது. (2) திரு.சுரேஷ், வயது-45, த/பெ. சின்னசாமி என்பவரை விசாரித்தபோது, தாம் ஸ்டீல் வியாபாரம் செய்து வருவதாகவும், TN-83-P-7696 என்ற இருசக்கர வாகனத்தின் உரிமை மாற்றப் பதிவு (Name Transfer) செய்வதற்காக அலுவலகத்திற்கு

வந்திருப்பதாகவும் தெரிவித்தார். அவரிடமிருந்த ரொக்கப் பணத்தை எண்ணிச் சரிபார்த்ததில் ரூ.22,000/- இருந்தது. (3) திரு.விஜயகுமார், வயது44, த/பெ. சாமிதாஸ் என்பவரை விசாரித்தபோது, அவரிடமிருந்த ரொக்கப் பணம் ரூ.970/- இருந்தது. அது தன்னுடைய சொந்தப் பணம் என தெரிவித்தார். (4) திரு.தண்டபாணி, வயது-56, த/பெ.மணி என்பவரை விசாரித்தபோது, தாம் அருணகிரி டிரைவிங் ஸ்கூல் நடத்தி வருவதாகவும், தன்னுடைய வாகனம் தொடர்பாக Fitness Certificate (FC) பணிக்காக அலுவலகத்திற்கு வந்திருப்பதாகவும் தெரிவித்தார். அவரிடமிருந்த ரொக்கப் பணம் ரூ.7,300/- இருந்தது. அப்பணம் குறித்து கேட்டபோது, அது தன்னுடைய சொந்தச் செலவிற்காகவும் மேலும் அந்த 786 என்ற ஒரே வரிசை எண்கள் உள்ளதால் தான் இராசிக்காக வைத்திருப்பதாவும் தெரிவித்தார். (5)திரு.சிவாஜி, வயது 58, த/பெ. பொம்மன்னன் என்பவரை விசாரித்தபோது, தாம் நாராயணி டிரைவிங் ஸ்கூல் நடத்தி வருவதாகவும் தெரிவித்தார்.அவரிடம் ரூ.530/- (6) திரு.ஜெயராஜ், த/பெ. ஜோசப் என்பவரை விசாரித்தபோது, தாம் ஜே.ஜே. டிரைவிங் ஸ்கூல் நடத்தி வருவதாகவும், டிரைவிங் ஸ்கூல் தொடர்பான அலுவல் நிமித்தமாக வந்திருப்பதாகவும் தெரிவித்தார். (7)திரு.குமரன், வயது-38, த/பெ. சிவானந்தன் என்பவரை விசாரித்தபோது, தாம் ஓட்டுநர் உரிமத்தை புதுப்பித்துக் கொள்வதற்காக வந்திருப்பதாகவும், தனது விண்ணப்பத்தை மணி டிரைவிங் ஸ்கூல் மூலமாக சமர்ப்பித்ததாகவும் தெரிவித்தார். (8)திரு.சங்கர், வயது-38, த/பெ.சுகுமார் என்பவரை விசாரித்தபோது, அவரிடமிருந்த ரொக்கப் பணம் ரூ.1,070/- இருந்தது. மேலும், அலுவலகத்தில் இருந்த திரு.ஆனந்த் வயது- 37, த/பெ. யுவராஜ் , புதுக்கோட்டை கிராமம், திருப்பத்தூர் தாலுகா என்பவரை விசாரித்தபோது, தாம் ஓட்டுநர் உரிமம் (Driving Licence) பெற வருவோருக்கு புகைப்படம் எடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ள தற்காலிக பணியாளர் என்றும் தெரிவித்தார். அவரிடம் எந்த ரொக்கபணம் இல்லை. மேற்படி நபர்கள் வைத்திருந்த பணத்திற்கு உரிய காரணம் கூறியதால் அந்த பணம் அவர்களிடமே கொடுக்கப்பட்டது. பின்னர் ஆய்வாளருக்கு கிடைத்த ரகசியமான தகவலின் அடிப்படையில், வட்டாரப் போக்குவரத்து அலுவலர் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் ஆகியோர் பயன்படுத்தி வந்த

தனியார் வாகனங்கள், வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திலிருந்து சுமார் அரை கிலோமீட்டர் தொலைவில் சாலையோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும் அதில் பணம் இருக்க வாய்ப்புள்ளதாகவும் வந்த தகவலை உறுதிப்படுத்தும் பொருட்டு, நாங்கள் மோட்டார் வாகன ஆய்வாளர் (நிலை-I) திரு. சி. முரளி என்பவரது பதிவு எண் TN-05-AD-8399 கொண்ட மாருதி ஸ்விப்ட் (Maruti Swift) கார் மற்றும் நேர்முக உதவியாளர் திருமதி.விஜயராணி என்பவரது பதிவு எண் TN-83-L-2122 கொண்ட சுசுகி பலேனோ (Suzuki Baleno) காரை சோதனை செய்ததில் எந்தவித பொருளும் இல்லை. பின்னர் வட்டாரப் போக்குவரத்து அலுவலர் திரு.கா.பன்னீர்செல்வம் என்பவரிடம், அவர் பயன்படுத்தி வந்த அவருடைய சொந்த வாகனம் பற்றி விசாரிக்க அதற்கு, தன் வாகனத்தின் பதிவு எண் TN-75-S-2345 TATA Zest கார் என்றும் அதன் தற்காலிக ஓட்டுநர் ஐயப்பன் என்றும் அவர் மதிய உணவு வாங்கிவர காரை எடுத்துச் சென்றிருப்பதாக தெரிவித்தார். அப்போது மேற்கண்ட வாகனத்தை உடனடியாக அலுவலக வளாகத்திற்கு கொண்டு வருமாறு அறிவுறுத்த, வட்டாரப் போக்குவரத்து அலுவலர், அவருடைய கைப்பேசி மூலம் ஓட்டுநர் ஐயப்பனை சோதனைக் குழுவினர் முன்னிலையிலேயே தொடர்புகொண்டு, வாகனத்துடன் உடனடியாக அலுவலகத்திற்கு வருமாறு தெரிவித்தார். பின்னர் திருப்பத்தூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு எதிரே செயல்பட்டு வந்த "மணி டிரைவிங் ஸ்கூல்" மற்றும் "கமலாம்பாள் டிரைவிங் ஸ்கூல்" இரண்டு ஓட்டுநர் பயிற்சி பள்ளிகளிலிருந்த நபர்களிடம் விசாரணை மேற்கொண்டதில் சந்தேகப்படும்படியான பணமோ பொருளோ காணப்படவில்லை. பின்னர் வட்டாரப் போக்குவரத்து அலுவலக வளாகத்திற்கு அருகில் சந்தேகத்திற்கிடமாக நிறுத்தியிருந்த சிகப்பு நிற மாருதி சுசுகி வேகன் ஆர் (Maruti Suzuki Wagon R) கார், பதிவு எண் TN-83-MB-3939, வாகனம் யாருடையது என்று அலுவலகத்தில் விசாரித்தபோது, அது ஓட்டுநர் உரிமம் பெற வரும் விண்ணப்பதாரர்களுக்கு புகைப்படம் எடுக்கும் தற்காலிக பணியாளராக பணியாற்றி வரும் திரு.ஆனந்த் என்பவருக்குச் சொந்தமானது என்று தெரியவந்தது. மேலும் ஆய்வாளருக்கு கிடைத்த ரகசியமான தகவலில் திரு.ஆனந்த் என்பவர் வட்டாரப்

போக்குவரத்து அலுவலகம் தொடர்பான பல்வேறு பணிகளை மேற்கொள்ள வரும் பொதுமக்கள் மற்றும் ஓட்டுநர் பயிற்சி பள்ளி உரிமையாளர்களிடமிருந்து பணம் பெற்று, அதனை சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் இடைத்தரகராக கொண்டு சேர்க்கும் பணியில் ஈடுபட்டு வருவதாக தகவல் கிடைத்திருந்ததால், திரு.ஆனந்த் முன்னிலையில் அவரது வாகனம் மற்றும் அவர் பயன்படுத்தி வந்த மின்னணு சாதனங்கள் விரிவாக சோதனை செய்யப்பட்டது. அப்போது அந்த காரில் உட்பகுதியில் Vivo நிறுவனத்தைச் சேர்ந்த ஒரு கைப்பேசி இருந்தது. அக்கைப்பேசியை ஆய்வு செய்தபோது, அதில் இரண்டு SIM அட்டைகள் பயன்படுத்தப்பட்டு வந்தது தெரியவந்தது. அவற்றின் கைப்பேசி எண்கள் 7010264889 மற்றும் 8838670763 என இருந்தன. மேற்கண்ட இரண்டு செல்போன் சிம் எண்களும் யார் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பது குறித்து ஆனந்திடம் விசாரித்தபோது, முதல் எண் தனது பெயரில் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும், இரண்டாவது எண் சக்தி டிரைவிங் ஸ்கூல் பணிபுரியும் குபேந்திரன் மனைவி திருமதி.செல்வி என்பவரின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். மேலும் செல்வி பெயரில் ஏன் கைப்பேசி எண் நீங்கள் வைத்துள்ளீர்கள் என்று கேட்க செல்வி பெயரில் இந்தியன் வங்கி கணக்கு உள்ளதாகவும் அந்த வங்கி கணக்கில் தான் இந்த மொபையில் Google Pay, PhonePe பயன்படுத்திவருவதாகவும் தெரிவித்தார். அதனை தொடர்ந்து, அவரது கைப்பேசியில் பயன்படுத்தப்பட்டு வந்த WhatsApp, Google Pay, PhonePe மற்றும் பிற மின்னணு பணப் பரிவர்த்தனை செயலிகளை ஆய்வு செய்தபோது, ஓட்டுநர் உரிமம் (DL), Learner's Licence (LLR), வாகனப் பதிவு (RC), உரிமை மாற்றம் (Transfer of Ownership), Fitness Certificate (FC), NOC உள்ளிட்ட போக்குவரத்து அலுவலகப் பணிகள் தொடர்பான ஆவணங்கள், விண்ணப்ப விவரங்கள் மற்றும் தகவல் பரிமாற்றங்கள் அதிகளவில் காணப்பட்டன. மேலும், பல்வேறு ஓட்டுநர் பயிற்சி பள்ளி உரிமையாளர்கள், இடைத்தரகர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து கணிசமான அளவில் மின்னணு பண வரவுகள் பெறப்பட்டு, பின்னர் பல்வேறு நபர்களுக்கு அவை மாற்றம் செய்யப்பட்டிருந்த பரிவர்த்தனை

பதிவுகளும் காணப்பட்டன. மேற்கண்ட மின்னணு பரிவர்த்தனைகளை விரிவாக ஆய்வு செய்ததில், ரூ.25,000/- வரை மாதமாதம் வெவ்வேறு தேதிகளில் தனித்தனி பணப் பரிவர்த்தனைகள் நடைபெற்றிருந்ததும், குறிப்பாக நடப்பு ஆண்டு ஜூன் மாதத்தில் மட்டும் Google Pay மற்றும் PhonePe செயலிகள் வாயிலாக மொத்தம் ரூ.88,580/- அளவிற்கு பண வரவு மற்றும் செலவு பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததும் பதிவுகளின் மூலம் தெரியவந்தது. மேற்கண்ட பணப் பரிவர்த்தனைகளின் தன்மை, அதன் நோக்கம், பணம் செலுத்திய மற்றும் பெற்ற நபர்களுடனான தொடர்பு குறித்து ஆனந்திடம் விரிவாக விளக்கம் கேட்டபோது, அவர் அளித்த விளக்கம் தெளிவற்றதாகவும், பரிவர்த்தனைகளின் தன்மைக்கு ஏற்ப திருப்திகரமான விளக்கத்தையும் கூறவில்லை. பின்னர், அலுவலகத்திற்கு வெளியேயிருந்த இடைத்தரகவர் திரு.திலீபன், வயது-38, த/பெ. அசோகன் என்பவரை விசாரித்ததில், பொதுமக்களுக்கு வாகனப் பதிவு (RC), ஓட்டுநர் உரிமம் (DL), Fitness Certificate (FC), NOC உள்ளிட்ட போக்குவரத்து அலுவலகம் தொடர்பான பல்வேறு பணிகளை செய்து கொடுக்கும் இடைத்தரகராக செயல்பட்டு வருவதாக தெரிவித்தார். தொடர்ந்து, அவரது கைப்பேசியில் இருந்த WhatsApp பரிமாற்றங்கள், Google Pay, PhonePe, வங்கி பரிவர்த்தனை விவரங்கள் மற்றும் தொடர்புடைய ஆவணங்களை ஆய்வு செய்தபோது, பல்வேறு நபர்களிடமிருந்து அதிகளவிலான பண வரவுகளும், அதனைத் தொடர்ந்து பிற நபர்களுக்கு பணம் அனுப்பிய பரிவர்த்தனைகளும் தொடர்ந்து நடைபெற்றிருந்தன. மேலும், போக்குவரத்து அலுவலகப் பணிகளை மேற்கொள்வது தொடர்பான தகவல் பரிமாற்றங்கள், ஆவணங்கள் மற்றும் விண்ணப்ப விவரங்களும் காணப்பட்டன. பின்னர் திருப்பத்தூர் வட்டார போக்குவரத்து அலுவலக பணியாளர் வருகைபதிவேடு, பணியாளர் பணப்பதிவேடு, Movement Register ஆகிய ஆவணங்களின் தேவையான பக்கங்கள் மட்டும் ஒளிநகல் எடுத்து வட்டார போக்குவரத்து அலுவலரின் சான்றொப்பத்துடன் கைப்பற்றப்பட்டது. மேலும், வட்டார போக்குவரத்து அலுவலர் அவரது சொந்த வாகனத்தில் கணக்கில் வராத பணம் வைத்திருப்பதாக முன்னரே ரகசியமான தகவல் கிடைத்திருந்த போதிலும்,

சோதனை நடவடிக்கை முடியும் வரை அவரது வாகனம் அலுவலகத்திற்கு திரும்பி வராததற்கான காரணத்தை வட்டாரப் போக்குவரத்து அலுவலரிடம் விசாரிக்க இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இதே போல சோதனை நடைபெற்ற போது சிலர் ஓட்டுநரை தாக்கியதாகவும் அதனால் தற்போது பயந்து போய் அலுவலகம் வரவில்லை என கூறினார். திடீர் சோதனை சம்மந்தமான முழு விபரங்கள் அனைத்தும் 18.06.2026 ஆம் தேதி நண்பகல் 12.00 மணிமுதல் இரவு 20.00 மணிவரை திடீர் கூட்டு சோதனை ஆய்வு நடவடிக்கை செயல்முறை ஒன்று தயார் செய்யப்பட்டது. திடீர் ஆய்வின்போது கைப்பற்றப்பட்ட ஆவணங்களையும் தீடீர் சோதனை மகஜரையும் இணைத்து தங்களிடம் ஒப்படைக்கின்றேன். மேற்படி சோதனையின் போது கிடைக்கப்பெற்ற மின்னது தகவல்கள் பணப்பரிவர்தனை பதிவுகள் மற்றும் பிற சூழ்நிலைய ஆதாரங்களின் அடிப்படையில் திருப்பத்தூர் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.கா.பன்னீர்செல்வம் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் (நிலை-I) திரு.சி.முரளி ஆகியோர் இடைத்தரகர் திரு.ஆனந்த் என்பவர் மூலம் பொதுமக்களுக்கு போக்குவரத்து அலுவலக பணிகளுக்காக சட்டவிரோதமாக இலஞ்ச பணம் பெற்றுள்ளதாக தெரியவருகிறது. எனவே இது சம்மந்தமாக உரிய சட்டநடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு,Sd(XXXX) 19.06.2026. Sir, Received the complaint on 19.06.2026 at 16.00 hrs, after getting oral permission from the DVAC, Chennai, I am registering a case in Tirupathur V&AC Cr.No. 03/2026 u/s 7 (a) and 12 r/w 7 (a) of the Prevention of Corruption Act, 1988, as amended by Act 16 of 2018 on 19.06.2026 at 17.30 hrs (sd xxxxx), 19.06.2026 (B.Gowri), Inspector of Police, Vigilance and Anti-Corruption, Tirupathur.

The Original First Information Report along with the original typed complaint of Tr.D.Venugopal, dated 19.06.2026, Original Joint Surprise Check Proceedings dated 18.06.2026, is submitted to the Hon'ble District and Session Judge cum Special Judge, Tirupathur and copy of the First Information Report is sent to the officers concerned.

19/06/2026
Inspector of Police
Vigilance & Anti-Corruption
Tirupathur